சுகாதார நிலையத்தில் போதிய படுக்கை வசதியும், மருத்துவ வசதியும் தேவைப்படுவதால், அதை ஏற்படுத்தித் தர அம்மாவைக் கேட்டுக் கொள்கிறேன். அரக்கோணம் ஒன்றியம், மோசூர் ஆரம்ப சுகாதார நிலையம் திறப்பு விழா நடந்து முடிந்ததிலிருந்து ஒரு மருத்துவரோ, செவிலியரோ வருவதில்லை. அங்கே ஒரு மருத்துவரை நியமித்தால் நலமாக இருக்கும்.

"அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே" என்ற பாரதியின் கவிதை வரிக்கு உயிர் கொடுத்த எங்கள் புரட்சித் தாயே, உங்கள் பிள்ளைகளான எங்களை என்றென்றும் வழிநடத்திடும் எங்கள் தெய்வமே, 'உடல் மண்ணுக்கு, எங்கள் உயிர் புரட்சித் தலைவிக்கு' என்று கூறி, இந்த மாமன்றத்திலே பேச எனக்கு வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

5. அறிவிப்பு

உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்கல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பேரவைக் கூட்டம் மாலையிலும் நடைபெறவிருப்பதால், மாலை 4–30 மணியளவில், சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சிற்றுண்டி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 4–30 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–33 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS